**செய்தி வெளியீடு எண். 67** **நாள்: 31.01.2018**

# திரவ உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தில் தளவாடங்கள் அமைக்கப்பட்டு உற்பத்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், புழல் வட்டாரத்தில் ரூ.1.25 கோடி செலவில் அமைக்கப்பட்ட திரவ உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தில் தளவாடங்கள் அமைக்கப்பட்டு உற்பத்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.01.2018) துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகளின் உற்பத்தி இருமடங்காகவும் வருமானம் மும்மடங்காக உயர்த்தவும், அரசு பல்வேறு வேளாண் நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் உர செலவை 25-30% வரை குறைக்க ஏதுவாகவும், இராசயன உரங்கள் அதிக அளவு பயன்பாட்டை குறைக்கவும், திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்து அதன் மூலம் பயன் பெற, மாவட்டத்தில் ரூ.1.25 கோடி செலவில் திரவ உயிர் உரங்கள் உற்பத்தி மையம் அமைத்து அதற்கான தளவாடங்கள் அமைக்கப்பட்டு இன்ற முதல் செயல்பாட்டுக்கு வருகிறது. இது நாள் வரை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு திரவ உயிர் உரங்களை வெளி மாவட்டங்களில் இருந்து பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. இனி வரும் காலங்களில் நமது விவசாயிகளுக்கு, நமது மாவட்டத்திலேயே திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்து உடனுக்குடன் வழங்கப்படும். இம்மையத்தில் தினசரி 200 லிட்டர் வீதம் ஆண்டுக்கு 50,000 லிட்டர் உற்பத்தி செய்யப்படும். இதனால் 1,90,000 விவசாயிகள் பயன் பெறுவார்கள். இதனை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை கூடுதல் இயக்குநர் திரு.தங்கசாமி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.குணசேகர், வேளாண்மை துணை இயக்குநர்கள் திரு.ராகவேந்திர ராவ் (பொ), திரு.எபிநேசர் (பொ), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு.பிரதாப் ராவ், மாதவரம் வட்டாட்சியர் திரு.ரமேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**